# தேவகோட்டையிலிருந்து ஆனந்தூருக்கு செக்ககுடி வழியாக அரசுப் பேருந்து

## அமைச்சர் தொடங்கிவைத்தார்

தேவகோட்டையிலிருந்து ஆனந்தூருக்கு செக்ககுடி வழியாக புதிய அரசுப் பேருந்தை சனிக்கிழமை தொடங்கிவைத்த அமைச்சர் டி.கே. பிரபு.

**காரைக்குடி, ஆக. 29:** சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையிலிருந்து ஆனந்தூருக்கு செக்ககுடி வழியாக காரைக்குடி மண்டலம் சார்பில் புதிய அரசுப் பேருந்தை அமைச்சர் டி.கே. பிரபு சனிக்கிழமை தொடங்கிவைத்தார்.

பள்ளி மாணவ, மாணவிகள், பொதுமக்களின் வசதிக்காக தேவகோட்டை- வண்டல் வழித்தடப் பேருந்து காலை 7.50 மணிக்கு தேவகோட்டையிலிருந்து வண்டல் செல்லும் போதும், மாலை 4 மணிக்கு ஆனந்தூரிலிருந்து தேவகோட்டை செல்லும் போதும் செக்ககுடி புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி வழியாக இந்தப் பேருந்து இயக்கப்படும்.

பேருந்து தொடக்க விழாவில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக (கும்பகோணம்) காரைக்குடி மண்டல அலுவலர்கள், கிராம பொதுமக்கள், பள்ளி மாணவ, மாணவிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தனியார் முதலீட்டு நிறுவனம் மீது மோசடி புகார்

# சிவகங்கை மாவட்ட எஸ்.பி. அலுவலகத்தில் பாதிக்கப்பட்டோர் மனு

சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் தனியார் நிதி நிறுவன மோசடி தொடர்பாக புகார் மனு அளிக்க வந்த கிராம மக்கள்.

**சிவகங்கை, ஆக. 29:** சிவகங்கை மாவட்டத்தில் FQL செயலி வழியாக நடத்தப்பட்ட முதலீட்டு நிறுவனத்தின் சார்பில் பல கோடி ரூபாய் மோசடி செய்ததாகக் கூறி, சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டோர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் சனிக்கிழமை மனு அளித்தனர்.

சிவகங்கை அருகே பையூர், காட்டுக் குடியிருப்பு, தீக்குளத்துப்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களிடமும், காளையார்கோவில் அருகே உள்ள புரசரைஉடைப்பு, உடையநகரம், அய்யம்பட்டி, காராம்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்தவர்களிடமும் FQL என்ற செயலி மூலம் நடத்தப்பட்ட நிறுவனத்தின் சார்பில் முதலீடுகள் பெறப்பட்டன.

இதில், ஒரு நபரிடமிருந்து சுமார் ரூ.1.08 லட்சம் முதல் ரூ.2.16 லட்சம் வரை முதலீடாக பெற்றதாகவும், இதற்கு அதிக லாபம் கிடைக்கும் எனவும் உறுதியளிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

ஆனால்,தற்போது முதலீடு செய்த பணமும், இதற்கான லாபத் தொகையும் கிடைக்கவில்லை எனவும், சிவகங்கை மாவட்டம் முழுவதும் இது போன்று பல்வேறு இடங்களில் பொதுமக்களிடம் பணம் வசூலிக்கப்பட்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதனிடையே, மதுரை, மேலூர், திண்டுக்கல், நத்தம் பகுதிகளிலும் இந்த செயலிகள் மூலம் முதலீடு பெற்று மோசடி செய்ததாக ஏற்கெனவே புகார்கள் எழுந்தன.

இதன் தொடர்ச்சியாக சிவகங்கை மாவட்டத்திலும் 100-க்கும் மேற்பட்டோர் ஒரே நேரத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் மனு அளித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியது.

சிவகங்கை மாவட்டத்தில் அந்த நிறுவனத்தின் பெயரில் மொத்தம் எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது, எத்தனை பேர்முதலீடுசெய்தனர்.பணம் வசூலித்த இடைத் தரகர்கள் யார், நிறுவனத்தின் பின்னணியில் இருப்பவர்கள் யார் என்பது குறித்து போலீஸார் விசாரணை நடத்த வேண்டும். தங்களிடம் இருந்து பெறப்பட்ட பணத்தை மீட்டுத் தருவதுடன், மோசடியில் தொடர்புடையவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் வலியுறுத்தினர்.

இதனிடையே, மதுரை, திண்டுக்கல்,சிவகங்கை,இதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் 45 நாள்களில் இரட்டிப்பு பணம் தருவதாகக் கூறி சுமார் 83 ஆயிரம் பேரிடம் சுமார் ரூ.800 கோடி வரை செயலி மூலம் நிதி மோசடி நடைபெற்றிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. மோசடி தொடர்பாக, இதுவரை முகவர்கள்,இடைத் தரகர்கள் உள்பட 12-க்கும் மேற்பட்டோரை போலீஸார் கைது செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

# கமுதி அரசு ஐடிஐ கட்டுமான பணிகள் தடுத்து நிறுத்தம்

கமுதி அருகே பசும்பொன்னில் அரசு தொழில் பயிற்சி நிலைய கட்டுமானப் பணிகளை தடுத்து நிறுத்தியவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்திய போலீஸார்.

**கமுதி, ஆக. 29:** கமுதி அருகே அரசு தொழில் பயிற்சி நிலைய கட்டுமானப் பணிகள் சனிக்கிழமை தடுத்து நிறுத்தப்பட்டன.

ராமநாதபுரம் மாவட்டம், கமுதியில் பசும்பொன் அருகே கடந்த திமுக ஆட்சியில் 2025- ஆம் ஆண்டு அரசு தொழில் பயிற்சி நிலையம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு, முதல் கட்ட கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில், தொழில் பயிற்சி நிலையம் கட்ட தேர்வு செய்யப்பட்ட இடம் கடந்த 1953- ஆம் ஆண்டு வரை பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயரில் இருந்தது. 1958-க்குப் பிறகு யூடிஆர் பெயர் மாற்றத்தில் அரசுக்குச் சொந்தமான தரிசு நிலமாக இது மாற்றம் செய்யப்பட்டுள்ளது என பசும்பொன் தேவரின் தந்தை உக்கிரபாண்டியத் தேவரின் இரண்டாவது மனைவியின் வாரிசுகள் எனக் கூறி 20-க்கும் மேற்பட்டோர் அரசு ஐடிஐ கட்டுமானப் பணிகளை சனிக்கிழமை தடுத்து நிறுத்தினர்.

மேலும் இந்த இடம் நீதிமன்றத்தில் எங்களுக்கு சொந்தம் என தீர்ப்பு வந்துள்ளது எனத் தெரிவித்த அவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த ஊழியர்களை வெளியேற்றி, பொக்லைன் இயந்திரத்தை அகற்ற வலியுறுத்தினர்.

இதைத் தொடர்ந்து கமுதி காவல் துறை, வருவாய்த் துறையினர் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். இதனால் அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.

# பள்ளி மேலாண்மைக்குழு கூட்டம்

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கல்வி அலுவலகக் கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு வழிகாட்டுதல் கூட்டத்தில் பேசிய சிவகாசி மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) செந்தில்குமார்.

**ஸ்ரீவில்லிபுத்தூர், ஆக. 29:** ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகள், நகரவை நடுநிலைப் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கான பள்ளி மேலாண்மைக் குழு மறுகட்டமைப்பு வழிகாட்டுதல் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரக் கல்வி அலுவலர் முருகேசன் முன்னிலை வகித்தார். சிவகாசி மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) செந்தில்குமார் தலைமை வகித்து, பள்ளி மேலாண்மைக்குழு மறுகட்டமைப்பு தொடர்பான ஆலோசனைகளை வழங்கினார்.

இந்தக் கூட்டத்தில் ராஜபாளையம் வட்டாரக் கல்வி அலுவலர்கள், வத்திராயிருப்பு வட்டாரக் கல்வி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, வட்டாரக் கல்வி அலுவலர் சுப்புலட்சுமி வரவேற்றார். ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாரக் கல்வி அலுவலர் அனுராதா நன்றி கூறினார்.

# மாமியார் கொலை: மருமகன் கைது

கைதான சிவா.

**விருதுநகர், ஆக. 29:** விருதுநகரில் குடும்பத் தகராறில் மாமியாரைக் குத்திக்கொலை செய்த மருமகனை போலீஸார் சனிக்கிழமை கைது செய்தனர்.

விருதுநகர் அருகேயுள்ள செவல்பட்டியைச் சேர்ந்தவர் சமுத்திரக்கனி. இவரது மகள் வாசகதேவி (27). இவர் பாலையம்பட்டியைச் சேர்ந்த சிவாவை (26) காதலித்து திருமணம் செய்தார். இந்த நிலையில், சிவா அடிக்கடி மது அருந்திவிட்டு வாசகதேவியிடம் தகராறில் ஈடுபட்டு வந்தார். எனவே, வாசகதேவி விவாகரத்து கோரி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த நிலையில், சனிக்கிழமை அதிகாலை, வாசகதேவியின் வீட்டுக் கதவை சிவா தட்டினார். அப்போது அவரது தாய் சாந்தி கதவைத் திறந்தபோது, அவரை கத்தியால் சரமாரியாக குத்தினார். அவரது அலறல் சப்தம் கேட்டு அண்ணன் சாமிமுருகன்(33) வந்தார். அவரையும் சிவா கத்தியால் குத்தினார்.

இதையடுத்து அக்கம் பக்கத்தினர் அங்கு கூடியதால் சிவா அங்கிருந்து தப்பியோடி விட்டார்.

பின்னர், அவசர ஊர்தியில் இருவரையும் மீட்டு, விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

அப்போது சாந்தியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாகத் தெரிவித்தனர். பலத்த காயமடைந்த சாமிமுருகன் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுகுறித்து சூலக்கரை போலீஸார் வழக்குப் பதிவு செய்து சிவாவைக் கைது செய்தனர்.

## இன்றைய நிகழ்ச்சிகள்

**குன்றக்குடி (காரைக்குடி)**

**மகாகுருபூஜை விழா:** குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் குருமுதல்வரின் 701–ஆவது ஆண்டு மகாகுரு பூஜை விழா,நூல் வெளியீடு, தலைமை– நீதிபதி (ஓய்வு) மெ. சொக்கலிங்கம், சிறப்புரை– தமிழக இயற்கை வளங்கள் துறை அமைச்சர் டி.கே.பிரபு, திருப்பத்தூர் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் ராம.சீனிவாசசேதுபதி, குன்றக்குடி திருமடம், காலை 10, பாராட்டு விழா, தலைமை– குன்றக்குடி ஆதீனம் பொன்னம்பல அடிகளார், தமிழாகரர் பட்டம் பெறுவோர்: பேராசிரியர்கள் சபா. அருணாசலம், கரு.முத்தையா, மாலை 3.

**பரமக்குடி**

ஸ்ரீசுந்தரராஜப்பெருமாள் கோயிலில் ஆவணி ஞாயிற்றுக் கிழமையை முன்னிட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள், காலை 8.10.


**மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி, மதுரை**
(தன்னாட்சி)
(தமிழ்நாடு நாயுடு மகாஜன சங்கத்தால் நிறுவப்பெற்றது)
சங்கப்பதிவெண் : 132 / 1973,
பசுமலை, மதுரை - 625 004.

செ.மதிநாக / 2025 - 2026 நாள் : 29.08.2026

**வருடாந்திர கல்வி நிறுவன மகாசபைக் கூட்ட அறிவிப்பு**

அன்புடையீர்,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியின் வருடாந்திர கல்வி நிறுவன மகாசபைக் கூட்டம் வருகிற **27.09.2026ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, காலை 11.00 மணிக்கு** கல்லூரித் தலைவர் **உயர்திரு. M. விஜயராகவன் B.A.,** அவர்கள் தலைமையில் நமது கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள லெட்சுமி அம்மாள் - வீரப்ப நாயக்கர் கலையரங்கத்தில் நடைபெறவுள்ளது. அவ்வமயம் அங்கத்தினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்கள்**

1. முந்தைய 31.08.2025ம் தேதிய வருடாந்திர மற்றும் சிறப்பு கல்வி நிறுவன மகாசபைக் கூட்ட நடவடிக்கைகளை ஏற்று பதிவு செய்தல்
2. 2025-2026ம் ஆண்டிற்கான 52 வது ஆண்டறிக்கையை அங்கீகரிக்க.
3. கல்வி நிறுவன செயற்குழு பரிந்துரை செய்து அனுப்பியிருக்கும், 2025-2026ம் ஆண்டிற்கான தணிக்கை செய்யப்பட்ட அரசு உதவிபெறும் கல்லூரி, சுயநிதிப்பிரிவு, நிர்வாகம், தன்னாட்சி பிரிவு, சமுதாயக் கல்லூரி, மற்றும் பெண்கள் விடுதிக்கான வரவு-செலவு கணக்குகள், இருப்பு நிலை குறிப்புகள் தணிக்கையாளர் அறிக்கை ஆகியவற்றை ஏற்று அங்கீகரிக்க.
4. கல்வி நிறுவன செயற்குழு பரிந்துரை செய்து அனுப்பியிருக்கும், 2026-2027ம் ஆண்டிற்கான அரசு உதவிபெறும் கல்லூரி, சுயநிதிப்பிரிவு, நிர்வாகம், தன்னாட்சி பிரிவு, சமுதாயக்கல்லூரி மற்றும் பெண்கள் விடுதிக்கான உத்தேச வரவு-செலவு மதிப்பீட்டு (Budget) அறிக்கையை ஏற்று அங்கீகரிக்க.
5. கல்லூரி சங்க சட்ட விதி எண் 13(11)ன் படி கல்வி நிறுவன செயற்குழு பரிந்துரை செய்து அனுப்பியிருக்கும் 2026-2027ம் நிதி ஆண்டிற்கான தணிக்கையாளரை நியமித்தல் மற்றும் அவரது கட்டணத்தை நிர்ணயம் செய்வது சம்பந்தமாக தீர்மானிக்க.
6. தலைவர், செயலாளர் அவர்களால் கொண்டுவரப்படும் இதர தீர்மானங்கள்.

கல்வி நிறுவன செயற்குழுவிற்காக

Er. S.R. ஸ்ரீதர் B.E., செயலாளர் — M.விஜயராகவன் B.A., தலைவர்

குறிப்பு :-
1. பொருள் 3 மற்றும் 4ல் கண்ட 2025-2026ம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை, 2026-2027ம் ஆண்டிற்கான உத்தேச வரவு-செலவு மதிப்பீட்டு அறிக்கையின் (Budget) நகல் கல்லூரி செயலாளர் அலுவலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. அதன் நகலைப் பெற விரும்பும் அங்கத்தினர்கள் 12.09.2026ம் தேதிக்குப் பிறகு கல்லூரி செயலாளர் அலுவலகத்திற்கு வேலை நேரத்தில் நேரில் வந்து எழுத்து மூலமாக கோரிப் பெற்றுக்கொள்ளலாம்.
2. மகாசபைக் கூட்ட பொருள், கணக்குகள், தொடர்பாக விளக்கம் வேண்டுவோர் 19.09.2026ம் தேதிக்கு முன்பாக செயலாளருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டுகிறோம்.
3. அங்கத்தினர் தங்களது முகவரியில் மாற்றம் இருப்பின் எழுத்து மூலமாக உடனே செயலாளருக்கு தெரிவிக்க வேண்டுகிறோம்.
4. மதிய உணவு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.



**SOUTH INDIAN Bank** EXPERIENCE NEXT-GEN BANKING

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்: முதல் மாடி, YMCA பில்டிங், அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.bank.in, Ph: 0452 2300205

**இ-ஏல விற்பனை அறிவிப்பு**

Ref: RO/MDU/SALE/049/2026-27 தேதி: 27.08.2026

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையநல அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

கடன்தாரர்: 1) திரு. வேல்முருகன் A, உரிமையாளர் M/s. அருணா டெக்ஸ், 18 C2, நாயுடு தெற்கு தெரு, புதூர் ரோடு, செட்டியார்பட்டி, விருதுநகர், தமிழ்நாடு - 626 122, மேலும் இருப்பிடம் 7A 1/E, நாயுடு தெற்கு தெரு, தலவாய்புரம், செட்டியார்பட்டி, அயன்கொல்லங்கொடன், விருதுநகர், தமிழ்நாடு - 626 122. மற்றும் S.No.63/3B2, நியூ சப் டிவிஷன் S No.63/3B2A & 63/3B2C, வார்ட் எண்.3, பிளாட் எண்.18, ஹரிசன் தெற்கு தெரு, செட்டியார்பட்டி டவுன் பஞ்சாயத்து, இராஜபாளையம், விருதுநகர் - 626 111. மற்றும் D No.7A/1D, S.No.318/5A, புதிய சப் டிவிஷன் S.No.318/5A 1C1, வார்டு எண்.5, நாயுடு தெற்கு தெரு, கோமந்தபுரம், செட்டியார்பட்டி டவுன் பஞ்சாயத்து, இராஜபாளையம் தாலுகா, விருதுநகர் - 626111. D.No.55 K24-3, நாயுடு தெற்கு தெரு, வார்டு எண்.5, செட்டியார்பட்டி டவுண் பஞ்சாயத்து & கிராமம், இராஜபாளையம் தாலுகா மற்றும் விருதுநகர் மாவட்டம், தமிழ்நாடு 626 111. உத்திரவாதி: 2) திருமதி. முத்துமாரி, 7A 1/E, நாயுடு தெற்கு தெரு, தலவாய்புரம், செட்டியார்பட்டி, அயன்கொல்லங்கொடன், விருதுநகர், தமிழ்நாடு - 626 122.

தி சௌத் இந்தியன் வங்கி இராஜபாளையம் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/உத்திரவாதி M/s. அருணா டெக்ஸ் (உரிமையாளர் திரு. வேல்முருகன் A) அவர்களின் SIB GST Business Loan கணக்கிற்காக 26.08.2026 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், இராஜபாளையம் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.42,42,171.44 (ரூபாய் நாற்பத்தி இரண்டு லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து நூற்றி எழுபத்தி ஒன்று மற்றும் பைசா நாற்பத்தி நான்கு மட்டும்) மேலும் 01.08.2026 முதல் பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே","அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 07.10.2026 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தாரர்(கள்) / உத்திரவாதி(களு)க்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: திரு. வேல்முருகன் A

சொத்து விபரம்: விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் தாலுகா, செட்டியார்பட்டி கிராமம், சர்வே எண். 63/3, புதிய சர்வே எண்.63/3B2, புதிய உட்பிரிவு சர்வே எண். 63/3 B2A, 63/3B2C, தற்போது புதிய சர்வே எண்.63/4-ல் அமைந்துள்ளதும், வார்டு எண்.3, பிளாட் எண்.18-ல் உள்ளதுமான 2231.945 சதுரடி (1595.76 சதுரடி + 636.185 சதுரடி) அளவுள்ள இடம் மற்றும் அதன் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற அனைத்து கட்டுமானங்கள், மேம்பாடுகள், தற்போதிருக்கும் அடிப்படை உரிமைகள் மற்றும் அத்துடன் தொடர்புடைய அனைத்தும் சேர்த்து திரு. A. வேல்முருகன் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, செய்தூர் SRO-ல் 13.12.2019 அன்று பதிவுபெற்ற விற்பனைப் பத்திர எண்.3435/2019-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்படுள்ளது. 1595.76 சதுரடி அளவிற்கான எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்காக 16 அடி வடக்கு தெற்கு தெரு, கிழக்கு: பால்ராஜ் என்பவருக்கான காலி மனையிடம், தெற்கு: ராஜேந்திரன் என்பவருடைய காலி மனையிடம், மேற்கு: 2 வது அட்டவணையில் உள்ளது. 636.185 சதுரடி அளவிற்கான எல்லைகள்: வடக்கு: கிழக்கு மேற்காக 16 அடி வடக்கு தெற்கு தெரு, கிழக்கு: இங்கே 1வது அட்டவணையில் உள்ளது, தெற்கு: ராஜேந்திரன் என்பவருடைய காலி மனையிடம், மேற்கு: வடக்கு தெற்கு தெரு.

| | |
|---|---|
| சுவாதீனத்தின் தன்மை | அடையாள சுவாதீனம் |
| நிர்ணயிக்கப்பட்ட தொகை | ரூ.58,25,000/- (ரூபாய் ஐம்பத்தி எட்டு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்). |
| முன் வைப்புத் தொகை (EMD) | ரூ.5,82,500/- (ரூபாய் ஐந்து லட்சத்து எண்பத்திரண்டாயிரத்து ஐநூறு மட்டும்). EMD தொகை 05.10.2026 அன்று மாலை 05:00 மணி அல்லது அதற்கு முன்பாகவோ செலுத்தப்பட வேண்டும். |
| EMD/ விற்பனைத் தொகையை சமர்ப்பிக்கும் முறை | EMD மற்றும் விற்பனை தொடர்பாக செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் "The Authorised Officer, The South Indian Bank Ltd." payable at Madurai என்ற பெயரில் Demand Draft-ஆகவோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், மதுரை மெயின் கிளையின் "அங்கீகாரம் பெற்ற அலுவலரால்" பராமரிக்கப்பட்டு வரும் (IFSC Code: SIBL0000044) கணக்கு எண். 0044073000002184-க்கு RTGS மூலமாகவோ செலுத்தப்பட வேண்டும். |
| சொத்து ஆய்வு | முன் அனுமதியுடன் வேலை நாட்களில் 11:00 AM முதல் 04:00 PM வரை |
| ஏல அதிகரிப்புத் தொகை | ரூ.25,000/- (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) |
| இ-ஏல நேரம் மற்றும் தேதி | 07.10.2026 அன்று 11:00 AM முதல் 12:00 PM வரை (5 நிமிடம் தன்நீட்சியுடன் விற்பனை முடியும் வரை) |
| இ-ஏல சேவை வழங்குபவர் | M/s.4 Closure, Website: https://bankauctions.in தொடர்பு கொள்ள வேண்டிய நபர்: திரு. S. விஷால் நாத் (Mobile No.8142000735), Email Id: tnkl@bankauctions.in |
| வங்கிக்கு தெரிந்த வில்லங்கங்கள் | 01.12.2019 முதல் 26.08.2026 வரை வில்லங்கங்கள் ஏதுமில்லை. |

விற்பனை பற்றிய விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, இணையதளம் www.southindianbank.com மற்றும் https://bankauctions.in என்ற இணையதளத்திலும் விபரங்களை அறியலாம்.

ஏலங்களை கோர நினைப்பவர்கள், சொத்து ஆய்வு, இ-ஏல நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகள் ஆகியவை பற்றி மேலும் விபரமாக அறிவதற்கு, அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியையோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், இராஜபாளையம் கிளையை வேலை நேரத்திலோ அல்லது தி சௌத் இந்தியன் வங்கி லிட், மதுரை பிராந்திய அலுவலகத்தில் மொபைல் எண்கள். 9791747678/8281267835 ஆகியவற்றில் தொடர்பு கொள்ளவும்.

தேதி : 27.08.2026 இடம்: மதுரை — அங்கீகாரம் பெற்ற அலுவலர் மானு ஷாஜி (முதன்மை மேலாளர்)



பாங்க் ஆஃப் பரோடா / बैंक ऑफ़ बड़ौदा / Bank of Baroda India's International Bank — 119 FOUNDATION YEAR LEADING WITH TRUST

**பாங்க் ஆஃப் பரோடா**
கிளை : அருப்புக்கோட்டை கிளை : 187D, மதுரை ரோடு, புதிய பேருந்து நிலையம் எதிரில், மீனாம்பிகை நகர், நெசவாளர் காலனி, அருப்புக்கோட்டை – 626 101, போன் : 04566–222042, 222043, மின்னஞ்சல் : aruppu@bankofbaroda.bank.in

**அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு**
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆஃப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| கடன்தாரர்கள் / உத்தரவாதம்அளித்தவர்கள் / அடமானதாரர்கள் பெயர் மற்றும் விலாசம் | மொத்த நிலுவைத் தொகை 29.08.2026 தேதியன்று, | மின் ஏலத் தேதி / நேரம் | 1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை | சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை) | சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம் |
|---|---|---|---|---|---|
| M/s. சுவிதாஸ் ஸ்ரீ இன்ஃப்ரா (கடன்தாரர்) பிரதிநிதியாக அதன் உரிமையாளர் திரு.G.சுந்தரராஜ், (அடமானதாரர்) த/பெ.திரு. குருசாமி, எண்.50/2, தேவடெக்ஸ் காலனி ரோடு, கணேஷ் நகர், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் திருமதி.சுப்புலட்சுமி, (உத்தரவாதமளித்தவர் / அடமானதாரர்) க/பெ.திரு.சுந்தர்ராஜ். G, எண்.50/2, தேவடெக்ஸ் காலனி ரோடு, கணேஷ் நகர், அருப்புக்கோட்டை, விருதுநகர் மாவட்டம் | ரூ.1,49,09,667/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து ஒன்பது லட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று அறுபத்து ஏழு மட்டும்) மற்றும் பின்வட்டி, ஒப்பந்தப்படியான செலவுகள், பிற கட்டணங்களுடன். | 08.10.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை | சொத்து எண்.1 : 1. ரூ.1,42,43,000/– (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து இரண்டு லட்சத்து நாற்பத்து மூன்றாயிரம் மட்டும்) ஏலக் குறிப்பீட்டினை BAANKNET போர்டல் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். 2. ரூ.14,24,300/– (ரூபாய் பதினான்கு லட்சத்து இருபத்து நான்காயிரத்து முன்னூறு மட்டும்) 3. ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) சொத்து எண்.2 : நிலம் மற்றும் கட்டிடத்திற்கு 1. ரூ.1,22,49,000/– (ரூபாய் ஒரு கோடியே இருபத்து இரண்டு லட்சத்து நாற்பத்து ஒன்பதாயிரம் மட்டும்) ஏலக் குறிப்பீட்டினை BAANKNET போர்டல் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும். 2. ரூ.12,24,900/– (ரூபாய் பனிரெண்டு லட்சத்து இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) 3. ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) | ஆக்கபூர்வ (Constructive) சுவாதீனம் | 05.10.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |

அசையாச் சொத்தின் விரிவான விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன் (உரிமையாளர் / அடமானதாரர் பெயர்)

சொத்து–1 : (திரு. குருசாமி மகன் திரு. G. சுந்தர்ராஜ் பெயரிலுள்ளது :)விருதுநகர் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை சார் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை டவுன், முன்னர் அருப்புக்கோட்டை கிராமம், திருச்சுழி ரோட்டுக்கு வடபுறம், தற்போது கணேஷ் நகர், முன்னர் தேவா டெக்ஸ் காலனி, இதிலுள்ள மனை எண்.46, 47, 48, 49 மற்றும் 50 வீடு மற்றும் காலி நிலச் சொத்து மற்றும் காலி நிலத்தின் அளவுகளாக, கிழமேல் வடபுறம் 40 அடி, கிழமேல் தென்புறம் 39 அடி, தென்வடல் இருபுறமும் 100 அடி, என மொத்தம் 9.26/436 சென்ட், அதாவது 3950 சதுரடி, இதில் மனை எண்.50ன் தென்புறக் கோடியில் 97.50 சதுரடி போக, தற்போதைய மொத்தம் 3852.50 சதுரடி, டவுன் சர்வே எண்.3/41 மற்றும் 7/45, வார்டு F, பிளாக் 8 ல் உள்ளது, சர்வே எண்.296/6, பட்டா எண்.990 உள்ள 1 ஏக்கர் 36 சென்ட் புஞ்சை நிலத்தின் தென்மேற்குப் புறமுள்ள வீட்டு மனை, செங்கற்களாலும் மற்றும் சிமெண்டாலும் கட்டப்பட்ட தார்க்கூரை வீடு, கதவுகள் மற்றும் சன்னல்களுடன்– கதவு எண்கள் 50, 50/1 மற்றும் 50/2, வரி விதிப்பு எண்கள் 126/025/901351, 126/025/901352 மற்றும் 126/025/901353, மின்னிணைப்பு எண்கள் 07201020371, 07201020332 மற்றும் 07201020370. இதன் எல்லைகள் விபரம் : வடக்கு – S.தனபால் வாங்கிய மனை எண்.45, கிழக்கு – 15 அடி அகல தென்வடல் வீதி, தெற்கு – மனை எண்.48, மேற்கு – பொய்யாளி நாய்க்கருக்குச் சொந்தமான புஞ்சை நிலம்.
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக்குறிப்பிற்காக) –அட்சரேகை : 9.504856 மற்றும் தீர்க்கரேகை : 78.114772
சொத்து–2 : (திரு.G. சுந்தர்ராஜ் மனைவி, திருமதி. சுப்புலட்சுமியின் பெயரிலுள்ளது) : இனம்–1 : விருதுநகர் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை சார் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, கஞ்சநாய்க்கன்பட்டி கிராமம், இதிலடங்கிய மனை மற்றும் வீடு மற்றும் காலி நிலம் கிழமேல் இருபுறமும் 72½ சதுரடி, தென்வடல் இருபுறமும் 23 அடி, மொத்தம் 1667.5 சதுரடி அதாவது 154.92 சதுர மீட்டர் அதாவது மேற்புறமுள்ள 5 சென்டின் 3.13/16 சென்ட், இதில் சர்வே எண்.3/7 ல் உள்ள 10 சென்டின் வடபுற பகுதியில், மேற்புறம் வழித்தடம் நீங்கலாக, மற்றும் 'A' பதிவேடு சாராம்சத்தின் உட்பிரிவின்படி சர்வே எண்.3/7A மற்றும் செங்கல், சிமெண்ட்டால் கட்டப்பட்ட தார்க் கூரை வீடு, கதவுகள், சன்னல்களுடன், கதவு எண்கள் 2/254, 2/254A, 2/254B, 2/254C மற்றும் 2/254D, வரி விதிப்பு எண்கள் 1493, 1494, 1495, 1496 மற்றும் 1497 மற்றும் மின்சார சர்வீஸ் இணைப்புகள் எண்கள் 0721108713, 0721102757, 0721102778, 072110779 மற்றும் 0721102758. எல்லைகள் : வடக்கு – போத்தி மூப்பனாருக்குச் சொந்தமான வீட்டு மனை, கிழக்கு – கணபதி மூப்பனாருக்குச் சொந்தமான வீட்டு மனை, தெற்கு – சுப்ரமணிய மூப்பனாருக்குச் சொந்தமான வீட்டு மனை, மேற்கு – தென்வடல் பொது வழித்தடம். இனம்–2 : விருதுநகர் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை சார் பதிவு மாவட்டம், அருப்புக்கோட்டை தாலுகா, கஞ்சநாய்க்கன்பட்டி கிராமம், இதிலடங்கிய மனை மற்றும் காலி நிலம், அளவுகளாக கிழமேல் இருபுறமும் 73 அடி மற்றும் தென்வடல் இருபுறமும் 23 அடி, மொத்தம் 1679 சதுரடி அதாவது 155.98 சதுர மீட்டர் அதாவது 3.371/436 சென்ட், வடபுற பகுதியில் சர்வே எண்.3/6ல் உள்ள மொத்தம் 28 சென்ட், 'A' பதிவேடு சாராம்சத்தின் உட்பிரிவின்படி சர்வே எண்.3/6B, விவசாயத்திற்கல்லாத புஞ்சை நிலம், பிளாட்டுகளாகப் பிரிக்கப்பட்டதில் எல்லைகள் விபரம் : வடக்கு – சுப்ரமணிய மூப்பனாருக்குச் சொந்தமான வீட்டு மனை, கிழக்கு – ஆறுமுக மூப்பனாருக்குச் சொந்தமான வீட்டு மனை, தெற்கு– சுப்ரமணிய மூப்பனாருக்குச் சொந்தமான வீட்டு மனை, மேற்கு – தென்வடல் பொது வழித்தடம்.
வங்கிக்குத் தெரியவந்த வில்லங்க விபரம் (ஏதேனுமிருப்பின்) : NIL GPS ஒருங்கிணைப்புகள் (இருப்பிடக்குறிப்பிற்காக) – அட்சரேகை : 9.502232 மற்றும் தீர்க்கரேகை : 78.111102

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://bankofbaroda.bank.in/e-auction மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 8747987379; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.
தேதி: 29.08.2026 / இடம்: அருப்புக்கோட்டை — முதன்மை மேலாளர் / அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பாங்க் ஆஃப் பரோடா